www.tamilarangam.net

# 83 யூலைகள் கறுப்புப்பக்கங்களைப்புரட்டி அரச பயங்கர வாதத்தை அம்பலப்படுத்துவோம்

1983-யூலை மாதம் ஈழமக்களின் வாழ்க்கையிலே வந்த கரிய மாதம். சிறீலங்காவின் இனவாத அரசு மனித உரிமைகளுக்கு ஒட்டுமொத்தமாகவே மயானம் சமைத்த மாதம். ஈழப்போராட்டம் இரத்தத்திலே குளித்து, ஈழப்போராளிகள் வெலிக்கடையிலே வெட்டிக் குவிக்கப்பட்டு, அவர்களது குரல்வளைகள் இரத்த வெறிபிடித்த ஓநாய்களால் குத்திக் குதறப்பட்ட துயர மாதம். சிறிலங்காவின் சோவனிச அரசும், அதனுடைய கூலிப்படையும், குண்டர்களும் சேர்ந்து ஆயிரக்கணக்கான எம்மக்களைக் கொன்றும் உடமைகளைச் சூறையாடியும், துவம்சம் செய்தும் எம்மக்களின் நெஞ்சங்களில் மாறாத இரத்தக் காயங்களைப் பதித்த மாதம்.

தோழர்களே...!

ஈழதேசமெங்கும் ஈழமக்களின் அன்றாட வாழ்க்கை இன்று இரத்தத்தால் எழுதப்பட்டு எம்மக்களுக்கெதிரான ஆக்கிரமிப்பாளரின் அராஜகங்கள் தினமும் புதுப்புது வடிவங்களில் மனித வேட்டைகளாய் விஸ்தரிக்கும் இந்தக் காலகட்டத்தில், அனைத்துத் தடைகளையும் தகர்த்தெறிந்து ஐக்கியத்துடன் முனைப்படுத்தப்பட்டிருக்கும் ஈழப்போராட்டத்தை 1983 இன் கறுப்பு யூலை பதித்த காயத்தை எம்மனதில் நினைவுபடுத்தி வேகத்துடன் முடுக்கிவிட வேண்டும் என வேண்டுகிறோம்.

எனவே தோழர்களே! 83-யூலை எமது மக்களின் வாழ்க்கையிலே எழுதிய கரியவத்தியாயத்தை நினைவுகூரும் வகையில்... எமது மக்களின் அவலத்தை உலக அரங்கிற்கு கொண்டுவரும் வகையில், எதிர்வரும் யூலை மாதம் முழுவதிலும் ஆடம்பர வைபவங்களைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்; கேளிக்கை நிகழ்வுகளில் பங்கு கொள்ளாதீர்கள். ஈழப்போராட்டத்தில் பங்கு கொண்ட காரணத்திற்காக வெலிக்கடையில் கோரத்தனமாகக் கொல்லப்பட்ட போராளிகளுக்கு உங்கள் உண்மையான அஞ்சலியைச் செலுத்தும் வகையில் ஈழப்போராட்டத்தை முன்னெடுக்கும் இயக்கங்களோடு இணைந்து போராட்டத்திற்ககான பங்களிப்புகளில் பங்கு கொள்ளுங்கள்.

இந்த வகையில் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் ( EPRLF ) பிரான்சுக் கிளையினராகிய நாம் எமது நடவடிக்கைகளுக்கு உங்கள் பங்களிப்பை வேண்டுகிறோம். உங்களுக்குக் கிடைக்கும் விடுமுறை நேரங்களை எமது இயக்கத் தோழர்களுடன் இணைந்து ஈழப்போராட்டம் தொடர்பான பிரச்சார, நிதி சேகரிப்பு மற்றும் இதர பணிகளில் இக்காலகட்டப்பகுதிகளில் ஈடுபடுமாறு தோழமையுடன் வேண்டுகிறோம்.

இதுகுறித்து மேலதிக விபரங்களை அறிவதற்கும் உங்கள் பங்களிப்பைத் தருவதற்கும் நீங்கள் எமது அலுவலகத்தை நேரடியாகவோ அன்றி தொலைபேசி மூலமோ யூலை 1ம் திகதியிலிருந்து காலை 10 மணி தொடக்கம் பிற்பகல் 6 மணி வரை தொடர்பு கொள்ளலாம். தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

தொலைபேசி: 874 98 30.

10, RUE DES MARTYRS,
75009, PARIS.

அரச வன்முறையைப் புரட்சிகர போராட்டத்தால் முறியடிப்போம்

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி
(பிரான்சுக் கிளை)

20.6.85

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்